இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 20-06-2025

# நான்காவது என்ற மாயை!

உலகின் நான்காவது மிகப் பெரிய பொருளாதார நாடாக இந்தியாவை உயர்த்தி விட்டோம் என்று பா.ஜ.க. சொல்லிக் கொள்கிறது. இதனையே தங்களது ஆட்சியின் மிகப் பெரிய சாதனையாகவும் சொல்லத் தொடங்கி இருக்கிறார்கள்.

பிரதமர் மோடியோ இன்னும் பல படிகள் தாண்டிப் பேசத் தொடங்கி இருக்கிறார். **“உலகின் மூன்றாவது மிகப் பெரிய பொருளாதார நாடாக அடுத்த சில ஆண்டுகளில் இந்தியா உருவெடுக்கும்”** என்று சைப்ரஸ் நாட்டில் நேற்றைய தினம் பேசி இருக்கிறார் பிரதமர்.

**நான்காவது இடத்தை எட்டி விட்டோம் என்பதும், மூன்றாவது இடத்துக்குப் போய்விடுவோம் என்பதும் பா.ஜ.க. உருவாக்க நினைக்கும் மாயைகள் ஆகும்.**

இந்தியா நான்காவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்துள்ளதாக முதலில் சொன்னது நிதி ஆயோக்கின் தலைமை நிர்வாக அதிகாரி பி.வி.ஆர். சுப்பிரமணியம்.

ஐ.எம்.எஃப். எனப்படும் சர்வதேச நிதியத்தின் உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் படி இப்படி கணிக்கப்பட்டுள்ளதாக அவர் சொல்கிறார். இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.2 லட்சம், அமெரிக்க டாலராக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது ஜப்பான் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட கொஞ்சம் கூடுதல். இதை வைத்துத்தான் நான்காவது பொருளாதாரமாக இந்தியாவை உயர்த்தி விட்டோம் என்று சொல்கிறார்கள்.

2024 ஆம் ஆண்டில் ஜப்பான் நாட்டின் 4.112 டிரில்லியன் டாலர் ஜி.டி.பி.யுடன் 4 ஆவது இடத்திலும், இந்தியா 3.942 டிரில்லியன் டாலர் ஜி.டி.பி.யுடன் 5 ஆவது இடத்திலும் இருந்தது. (ஒரு டிரில்லியன் டாலர் என்றால் ரூ.85 லட்சம் கோடி) இதில் 5 ஆவது இடத்தில் இருந்து 4 ஆவது இடத்துக்கு இந்தியா உயர்ந்து விட்டது என்பது இவர்களது கூற்று.

**2025 ஆம் ஆண்டுக்கான ஐ.எம்.எஃப். அறிக்கையானது, 2025ஆம் ஆண்டின் இறுதியில் இந்தியாவின் ஜி.டி.பி.யானது 4.187 டிரில்லியன் அமெரிக்க டாலராகவும், ஜப்பான் நாட்டின் ஜி.டி.பி.யானது 4.186 டிரில்லியன் அமெரிக்க டாலராகவும் உயரும் என்று சொல்லி இருக்கிறது. இதை வைத்துத் தான் இப்படி பரப்புரை செய்கிறார்கள். அதாவது, இது ‘அடைந்த’ வளர்ச்சி அல்ல. ‘அடையப் போவதாகச் சொல்லும்’ வளர்ச்சியே ஆகும்.**

அதாவது, ‘நான்காவது இடத்தை இந்தியா எட்டலாம்’ என்ற கணிப்புதான் இது. எட்டலாம், எட்டாமலும் போகலாம் என்றுதான் இதனைப் பார்க்க வேண்டுமே தவிர, ‘எட்டிவிட்டது’ என்று சொல்ல முடியாது.

உலகின் முதல் பொருளாதார நாடாக அமெரிக்கா இருக்கிறது. இரண்டாவது பெரிய பொருளாதார நாடாக சீனா இருக்கிறது. மூன்றாவது இடத்தில் ஜெர்மனி இருக்கிறது. நான்காவது இடத்தில் ஜப்பான் இருக்கிறது.

இந்தியா மிகப்பெரிய பொருளாதார நாடாக வளர்ந்திருக்க வேண்டும், வளர்த்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும், அப்படி வளர்வதற்குத் தகுதியுள்ள நாடுதான் இந்தியா. உலகின் அதிகப்படியான மக்கள் தொகையைக் கொண்ட நாடு இந்தியா. மிகப்பெரிய நாடு இந்தியா. ஆனால் அதனைச் செய்வதற்கான மிகச் சரியான நடவடிக்கைகளில் பா.ஜ.க. அரசு செய்ததா என்றால் இல்லை. இந்தியாவில் தனிநபர் வருமானம், ஜப்பானின் தனிநபர் வருமானத்தில் 11 இல் ஒரு பங்குதான். இந்தியாவின் மக்கள் தொகை 146 கோடி. ஜப்பானின் மக்கள் தொகை 12 கோடிதான். இந்த அடிப்படையில் ஜப்பானை முந்துவதாக மார் தட்ட முடியுமா?

இந்தியாவில் பொருளாதாரச் சமநிலைமை இல்லை.

★ **ஒரு விழுக்காடு மக்கள், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 40 விழுக்காட்டை கட்டுப்படுத்துகிறார்கள்.**

★ **இந்தியாவில் ஒரு விழுக்காடு மனிதர்கள், இந்திய செல்வத்தின் 50 விழுக்காடு வைத்துள்ளார்கள். அடிமட்டத்தில் உள்ள 50 விழுக்காடு மக்களிடம் நாட்டின் செல்வமானது 3 விழுக்காடு மட்டுமே இருக்கிறது.**

★ **வருமானத்திலும் சமம் இல்லை. 10 விழுக்காடு மக்கள், தேசிய வருமானத்தில் 57 விழுக்காட்டை பெறுகிறார்கள்.**

★ **அனைத்துத் துறைகளும் சமமான வளர்ச்சியைப் பெறவில்லை. சேவை மற்றும் பெருநிறுவனங்களை மட்டுமே பா.ஜ.க. அரசு வளர்த்துள்ளது.**

★ **புதிய வேலைவாய்ப்புகளை பா.ஜ.க. அரசு உருவாக்க வில்லை. (பட்டதாரிகளின் வேலைவாய்ப்பின்மை 2.1 விழுக்காடாகவும், அதற்கு அடுத்த நிலையில் இருப்பவர்களில் 18.4 விழுக்காடு நபர்கள் வேலையில்லாமல் இருப்பதாகவும் புள்ளிவிபரங்கள் சொல்கிறது)**

★ **வேளாண்மையை முற்றிலும் புறக்கணிக்கிறது.**

★ **பா.ஜ.க. அரசின் வரிக் கொள்கை, ஏழை எளிய நடுத்தர மக்களைச் சுரண்டுவதாக அமைந்துள்ளது.**

★ **மாநில அரசுகளை சிதைப்பதாக பா.ஜ.க. அரசின் அரசியல், நிர்வாக, பொருளாதாரக் கொள்கைகள் அமைந்துள்ளன.**

★ **ஒற்றைத் தன்மை கொண்டதாக இந்தியாவை மாற்றுவதாக பா.ஜ.க.வின் சிந்தனை உள்ளது.**

- இப்படி அனைத்திலும் சமமற்ற நிலைமையைத்தான் இந்தியாவில் பா.ஜ.க. உருவாக்கி இருக்கிறது. இதனை வளர்ச்சி என்று எப்படிச் சொல்ல முடியும்.

**பொருளாதாரத்துக்கு ஏற்ப வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளதா? இல்லை. அமெரிக்காவின் தனிநபர் வருமானம் 89,105 டாலர். சீனாவில் தனிநபர் வருமானம் 13,687 டாலர். ஜெர்மனியில் தனிநபர் வருமானம் 55,911 டாலர். ஜப்பானில் தனிநபர் வருமானம் 56,000 டாலர். இந்தியாவில் தனிநபர் வருமானம் 2,878 டாலர். (நாட்டின் ஜி.டி.பி. அடிப்படையில் கணிக்கப்படுவது) மற்ற நாடுகளுக்கும் இந்தியாவுக்குமான வேறுபாடு மலையளவு இருக்கிறது. மனித வளத்தை மேம்படுத்தாமல் அடையும் வளர்ச்சி நிலையானதாக இருக்க முடியாது. அனைத்தையும் தாங்கும், எதிர்கொள்ளும், போராடும் வலிமை மனித சக்திக்கே உள்ளது.**

பொருளாதார வளர்ச்சி என்பது எண்களால் ஆனது அல்ல, எண்ணங்களால் ஆனது. எண்ணங்கள் பழுதுபட்டால், எண்கள் பழுதுபடும். அதனைத்தான் இன்று பா.ஜ.க. ஆட்சியில் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**இந்தியா உலகின் முதல் பொருளாதார நாடாகக் கூட உயரும். அதற்கு ஒன்றிய ஆட்சியாளர்களின் எண்ணங்கள் மாற வேண்டும்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (18.6.2025) தலைமைச் செயலகத்தில், மனிதவள மேலாண்மைத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி மற்றும் பயிற்சி நிலையத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / இயக்குநர் விக்ரம் கபூர், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், மனிதவள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் கோ. பிரகாஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 17.6.2025 அன்று சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் பேரூராட்சி செம்மொழிப் பூங்காவில், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 7.50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றிலும் தடுப்பு வலையுடன் அமைக்கப்பட்டுள்ள மின்னொளி விளையாட்டு மைதானத்தை திறந்து வைத்து, மகளிர் கைப்பந்துப் போட்டியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், பேரூராட்சித் தலைவர் திருமதி என்.கோகிலாராணி உள்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

## கீழடி தமிழர் தாய்மடி

# களமிறங்கிய மாணவரணிப் பட்டாளம்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும் - கழக நாடாளுமன்ற மாநிலங்களவைக் குழுத் தலைவருமான **திருச்சி சிவா அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆற்றியுள்ள உணர்ச்சிமிகு எழுச்சியுரை, களம் நோக்கி பாயும் ஏவுகணைகளாக மாணவப் பட்டாளத்தை ஆயத்தமாக்கியுள்ளது. மாணவப் பருவத்திலேயே கழகத்தில் ஒப்படைத்துக் கொண்டு, கழக மாணவரணிச் செயலாளராகவும் செயலாற்றியவராயிற்றே அவர்!**

ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்திட உதவிய மதுரை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சேடப்பட்டி மணிமாறன், மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் திரு. கோ.தளபதி எம்.எல்.ஏ., கழக உயர்நிலைச் செயல் திட்டக் குழு உறுப்பினர் திரு. பொன்.முத்துராமலிங்கம், ஒருங்கிணைந்த மதுரை மாவட்டக் கழக நிர்வாகிகள், மாணவரணிச் செயலாளர் சகோதரர் இராஜீவ் காந்தியுடன் துணை நின்ற மாநில, மாவட்ட மற்றும் அனைத்து நிலையிலுமான கழக மாணவரணி நிர்வாகிகள், கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் உங்களில் ஒருவனான என் நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள்!

தமிழர் நலனையும் தமிழின் பெருமையையும் காப்பதற்குக் கழகம் மேற்கொள்ளும் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக நிற்கும் கொள்கைவழிக் கூட்டணியில் உள்ள தோழமைக் கட்சிகளின் சார்பில் சென்னை சைதாப்பேட்டையில், கீழடி ஆய்வறிக்கையை ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணிப்பதைக் கண்டித்து நடைபெற்ற போராட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா கி. வீரமணி அவர்கள், கழகத்தின் சார்பில் பங்கேற்று முழக்கமிட்டு உணர்வை வெளிப்படுத்திய தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் தங்கபாலு அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் முத்தரசன் அவர்கள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் ‘எழுச்சித் தமிழர்’ தொல்.திருமாவளவன் எம்.பி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் தோழர் கனகராஜ் அவர்கள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் துணைத் தலைவர் திரு.எம்.அப்துல் ரகுமான் அவர்கள், மனிதநேய மக்கள் கட்சி மாநிலத் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., ம.தி.மு.க கொள்கை விளக்க அணிச் செயலாளர் திரு.வந்தியத்தேவன் அவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

**கீழடியிலும் சென்னையிலும் ஒலித்திருப்பது முதல் கட்ட முழக்கம். இது டெல்லி வரை தொடர்ந்து எதிரொலிக்கும். தமிழரின் பண்பாட்டுப் பெருமையை நிலைநாட்டும் வரை கழகத்தின் போராட்டம் ஓயவே ஓயாது!**

அன்புடன்

**மு.க. ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056

ஆனி 5

19-06-2025

# ரூ.48 லட்சத்தில் வேளச்சேரியில் அதிநவீன குளிரூட்டப்பட்ட உடற்பயிற்சிக் கூடம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜூன் 20-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை வேளச்சேரி அக்வாடிக் ஜிம்னாஸ்டிக் பாட்மிட்டன் (ஏஜிபி) விளையாட்டு வளாகத்தில் 48.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், விளையாட்டு வீரர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள அதிநவீன குளிரூட்டப்பட்ட உடற்பயிற்சி கூடத்தினை திறந்து வைத்தார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.6.2025) சென்னை வேளச்சேரி அக்வாடிக் ஜிம்னாஸ்டிக் பாட்மிட்டன் (ஏஜிபி) விளையாட்டு வளாகத்தில் 48.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், விளையாட்டு வீரர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள அதிநவீன குளிரூட்டப்பட்ட உடற்பயிற்சி கூடத்தினை திறந்து வைத்து, விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பயிற்சி பெறுவதை பார்வையிட்டார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகங்களில் அமைந்துள்ள உடற்பயிற்சி கூடங்கள் குளிரூட்டப்பட்டு, புதிய உபகரணங்கள் வாங்கி பொருத்திடவும், நவீன முறையில் சீரமைக்கவும் 9 கோடியே 78 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, சென்னை வேளச்சேரியில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அக்வாடிக் ஜிம்னாஸ்டிக் பாட்மிட்டன் (ஏஜிபி) விளையாட்டு வளாகத்தில் உள்ள உடற்பயிற்சி கூடம் 48.00 ரூபாய் இலட்சம் மதிப்பீட்டில் அனைத்து வகையான அதிநவீன உடற்பயிற்சி உபகரணங்கள் பொருத்தப்பட்டு குளிர்சாதன வசதியுடன் நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

வேளச்சேரி ஏ.ஜி.பி.நீச்சல் குள வளாகத்தில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதியில் ஆய்வு மேற்கொண்ட தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் விடுதியில் தங்கியுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சமைக்கப்பட்ட மதிய உணவினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். விளையாட்டு வீராங்கனைகளுக்கான விடுதியில் அவர்கள் தங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகளை பார்வையிட்டு, மேலும் அவர்கள் பெற்று வரும் பயிற்சி குறித்தும், கலந்து கொண்ட விளையாட்டு போட்டிகள் குறித்தும் கலந்துரையாடி, பதக்கங்கள் வெல்ல வாழ்த்து தெரிவித்தார். நீச்சல் குள வளாகத்தில் பல்வேறு உயரங்களில் இருந்து வெவ்வேறு முறைகளில் டைவ் அடித்து நீருக்குள் குதிக்கும் விளையாட்டில் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பயிற்சி பெறுவதையும் துணை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உடனிருந்தனர்.